ஓலை 98 | ஓசை 221 | டிசம்பர் 2024





# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்**

## பொருள்

**கற்றவரே கண் உடையவர்; கல்லாதவரோ முகத்தில் இரண்டு புண்ணையே உடையவர்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847


அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


**97, குஞ்சிதபாதம் நகர்,**
**டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# ஔவை மொழியில் அமுதப் பாக்கள்

## காவல் தானே பாவையர்க் கழகு!

## நேரிசை ஆசிரியப்பா



கற்பைக் காவல் காக்கும் பெண்களின்
கற்பே அறத்தின் கனிந்த அழகு;
நற்றமிழ் போல நல்லா ளவளின்
அற்றிடா எண்ணமும் அழகும் கற்பே;
பற்றுகள் வைத்துப் பாழாய்ப் போவதில்
முற்றும் வாழ்வும் முடிந்தே போகும்;
கற்றுத் தெளிந்தும் கற்பைக் காக்க
உற்றத் துணையுடன் உயிர்த்தல் அழகே;
மரம்செடி கொடிகள் மாடு ஆடு
அரணாய்க் காத்தல் அதனழ கேறும்;
ஒவ்வொரு உயிர்களும் உயர்ந்த கற்பை
அவ்வவப் போது அவையவைக் காத்தல்
நற்புகழ் விளையும் நன்மை பயக்கும்;
சொற்களில் கூட கற்பும் அழகும்
கலந்தே இருக்கும்; கற்றோர் கற்பும்
நலமுடன் போற்றி நயமாய்க் காத்தல்
நல்வினை வளரும்; நாடும் ஓங்கும்;
புல்முனை அளவும் போகா வண்ணம்
பெண்ணு(ம்) ஆணும் பெரியதாய்ப் போற்றி
எண்ணும் எழுத்தும் இணைந்தே இருந்தலாய்,
அழுகும் கற்பும் அணிகல னென்றே
வழுவா தொழுகிட வையம் சிறக்கும்;
காவல் காரனாய்க் கற்பை
ஆவலாய்க் காத்தல் அதுதான் அழகே!




**இலக்கணக் குறிப்பு:**

ஓரடிக்கு நான்கு ஈரசைச் சீர்கள் கொண்டு, இரண்டடிக்கோர் எதுகை பெற்று, ஒவ்வொரு அடியிலும் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமைந்து வரும். ஈற்றடிக்கு முன்னால் உள்ள அடியான ஈற்றயலடி மூன்று சீர்கள் பெற்று, ஈற்றடி நான்கு சீர்கள் பெற்று, ஈற்றுச் சீரான நான்காம் சீர் ஏகாரத்தில் முடியும். காய்ச்சீரும் அருகி வரும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# அறத்தினை எழுத சொன்னால்

எழுதுகோல் கொண்டு எதைத்தான் எழுத
விழுகாத சொல்லில்லை உள்ளத்தில் நாசாவின்
கண்விழா வெள்ளை நிலவவள் என்றளந்து
எண்ணி எழுத நினைவு.

அதோஅதே வாசனைதான் எங்கே வருகிறாள்
ஏதோ குழந்தையின் வாசனை இல்லையில்லை
ஏதோவோர் ரோசா அவிழ்ந்ததோ இல்லை
இதுவோ அவளின் வரவு.

சரிதான் அவளேதான் வந்துவிட்டாள் கையிலென்ன
காரிகை கேட்கிறாள் ஏனதை காட்டு
துரிதகதி கேள்வி கவிதையா காட்டு
தெரிந்தே வினவுகிறாள் நன்கு

நிலவாய் தெரியுதா கண்களுக்கு சொற்கள்
சிலவற்றால் தேர்ந்த கவிதையிது வாசித்தாள்.
எண்ணி எழுதிட ஆயிர காட்சியுண்டு
கண்ணில் தெரிந்திலையா கூறு.



நிலவென்றோ நல்குழந்தை வாசத்தாள் என்றோ
அலகிட்டு காதலியை வர்ணிக்க கூடாதா
சொல்லெடுத்து ஏதெழுத நானறியேன் என்றுநின்றேன்
சொல்லிடவே ஆயிரந்தான் உண்டு .

அறத்தினை நீயேன் எழுது கவிதை
திறத்தினை என்னழகு வர்ணிக்க நேரத்தை
வீணடிக்க அல்லாது ஞானத்தை நீயுணர்ந்து
காண கவிதை எழுது.

தட்டிதட்டி யாரோ அழைத்த உணர்வெழ
சட்டெனவே அஞ்சி விழித்தேன் சரிதான்
அழகாய் அவள்வாச உள்நினைவு காலை
அழகாய் கவிதை கனவு.

குறிப்பு : இக்கவிதைகள் இன்னிசை வெண்பா இலக்கணத்தில் எழுதப்பட்டுள்ளது. இக்கவிதைகள் இதழகலி வகையை சேர்ந்தது.அதாவது படிக்கும் போது உங்கள் உதடுகள் இரண்டும் பற்களில் படும் ஆனால் இரண்டு உதடுகளும் ஒட்டாது.

கவிஞர் மரு பு. பேச்சிமுத்து, விருதுநகர்

# நெருங்கி வாழ நினை

பா வகை : சந்தக் கலி மண்டிலம்
(கனி +கனி +கனி +மா)

சேர்ந்துவாழ்கிற மாந்தரினமே சிறக்கும்என அறிவாய்!
கூர்த்தஅறிவு கொண்டுமேஉளம்
கூடிவாழ்தலே சிறப்பாம்!
ஆர்பரித்துமே கொட்டும்வொரு
அருவிநீரென குளிர்வாய்!
நேர்மையின்வழி செயலாற்றியே நெறியுடனுமே வாழ்வாய்!

கல்லாகவே இருப்போரிடம்
கசிந்துருகுமோ அன்பு!
எல்லையின்றியே ஒன்றுபடுவாய் ஏற்றமுடனே நிமிர்வாய்!
மெல்லசேர்ந்திடும் மனநிறைவுமே
மேன்மைகொண்டிட மகிழ்வாய்!
தொல்லையின்றியே வாழ்வினிலும்
துயரகலவே வாழ்வாய்!



கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# பணிவுடைமை

**பா வகை : பஃறொடை வெண்பா**

ஆக்கம் நிறைந்தால்
அடக்கத்தைக் கொண்டிடு.

ஊக்கமே உன்னை
உயரே நிறுத்துமே.



தேக்கிய நீரோ
திரிந்தே கலங்குமே

ஏக்கமே வந்திட
ஏதமே நிறையும்.

பணிவுடன் இன்சொல்
பறைதல் சிறப்பே

அணியாகி நம்மை
அழகு படுத்தும்.

கணிசம் கூட்டி
கடமையை ஆற்றும்.

தணிவே விலக்குமே தடை.

அருஞ்சொல்
கணிசம்-மேம்பாடு,மதிப்பு
தணிவு-பணிவு

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

# சச்சந்தன் வரலாறு

கட்டான உடல், பேரழகு கொண்டவன்
திட்டம்போட்டு செயலாற்றும் திறமை
சிட்டுப்போல் இளமைத் துள்ளல் துடிப்பு
கடமை தவறாத செயல் வீரன்

தருமன் வழியில் மக்களைக் காப்பான்
வருணனை ஒத்த கொடை வள்ளல்
அருமை அரசன் அவன் சச்சந்தன்
திருமகள் மகனான காமனைப் போன்றவன்

பேரோடு புகழோடு வாழ்ந்த சச்சந்தன்
வேரோடு சரிந்தான் அவள் மடியில்
பாரா முகமானது அரசும் செங்கோலும்
தேரோடும் வீதிகள் வெறிச்சோடிப் போயின

அழகி அவள் ஒரு தேவதை
பழக தருவாள் பருக அமுதம்
சுழலும் பார்வை போதை ஏறும்
தவழும் மழலைஇறுக அணைவாள்
அவள்
விதையத்து மன்னன் மகள் விசயை
அசையும் இடை உண்டு என்பர்
இசையோடு சிலர் இல்லை என்பர்
குலைதள்ளாத வாழை போன்றவள்
("நுடங்கிடையை உண்டெனத் தமர்மதிப்பர் ..")
(நுடங்கு : நுட்பமான, தமர்: உற்றார்)

மாலையுடன் செப்புகளனைய கனிகள்
இளஞாயிறு பொன்னிற மேனி அவள்
வளைகரம் பிடித்து மணாளன் ஆனான்
மலைத்தான் திளைத்தான் எல்லாம் மறந்தான்

எந்த நேரமும் இரவும் பகலும்
இந்த வாழ்வே முறையென கொண்டான்
கந்தலாகி பவித்திரம் இழந்த மன்னன்
மன்னன் இல்லாமக்கள் வாடினர்



சரசம் தவிர வேறு அறியான்
அரசன் இருந்தும் அநாதை நாடு
பராமரிப்பின்றி துருபிடித்த இரும்பானது
தரம் கெட்டவன் தண்டல் காரனானான்

சச்சந்தன் அவையில் ஒருவன் கட்டியங்காரன்
மெச்சி மதிக்கும் நண்பன் அவன்
கச்சிதமாக அவனிடம் அரசை ஒப்படைத்தான்
விசயையை பிரியும் ஆற்றல் இல்லாதவன்

அரசின் அதிகாரம் கையில் இருக்க
சரளமாக நினைத்ததை செய்தான் அவன்
முரசு அடித்து செய்தி கூறினான்
அரசின் சேனைகளின் தலைவன் ஆனான்

தொடரும் ...

கவிஞர் ந. திருக்கொழு

# என்ன செய்வது?

தினம் ஓர் கண்ணீர்
நீங்காத வடிநீர்
காயம் பட்ட களம்
மனம் இல்லாத நிலம்
சோதனை கூடம்
களஞ்சியத்தின் காவியம்
காலம் முழுவதுமா
கேள்விகளுக்கிடையே
சுடுநீர் போல்
கொதித்துக் கொண்டிருக்கிறது
ஒவ்வொரு உயிரின் இடைவெளியிலும்
மாற்றம் இல்லாமல் மாயை
தினம் ஓர் மாறுபட்ட வேடத்தில்
உள்ளத்தை மெல்ல மெல்ல கொள்கிறது
வரவும் செலவும் வழக்கமில்லாமல்
வாழ்க்கையின் கண்ணீரில்
தினம் தினம் தீண்டுதே
தீ போல் பற்றி எரிந்து கொண்டே
இரக்கமில்லாமல் இறைவன் இல்லாததால்
ஆம் இல்லை இல்லை என்பதே இறைவன்
என்ன செய்வது எப்படி கடப்பது
கண்ணீர் தான் மருந்தாக
மீண்டும் மீண்டும் ஒரு விருந்தாக
விடுமுறை இல்லாமல் தினமும் பயணிக்கிறது
பலர் மனங்களில் பாரமும் பயமும்
பயணம் இல்லாமல் இப்பாவபட்ட
உலகில் எல்லாம் ஊனமே
என்ன செய்வது.?
இறைவா இரக்கமில்லாமல்
கடக்கிறேன்
என் உயிரின் இடைவெளியில்
சுதந்திரம் தேடி.



கவிஞர் ம. செல்லமுத்து

# மனிதநேயம் மலரட்டும்

எங்கே மனிதன் வாழுகின்றானோ
எங்கே உயிர்கள் மலர்கின்றனவோ
அங்கே மனிதம் மட்டும் பூக்கட்டும்
அங்கே மனிதநேயம் நேசக்கரம் விரிக்கட்டும்.

வெள்ளிநிலாவிற்கு வெள்ளையடிக்கமுனையும்
வெள்ளந்தி இதயங்கள் -அன்பின் சின்னமாய் மாறட்டும்
வெள்ளை உள்ளம் கொண்ட மானிடங்கள் -உலகம் முழுதும்
வெள்ளமாய் அன்பின் சிந்தனைகளை விரித்துப்பரவட்டும்.

விதைக்குள் விருட்சம் வைத்தவனே - உலகை
ஒரு குடைக்குள் கொண்டுவர நெம்புகோல் தூக்கியவனே
மாயை உலகில் மாய்ந்து உழலும் அன்பின் அயலானே
மனிதம் வளர்த்திட்டே மனிதநேயம் விரித்திட மறந்தாயோ?

பரந்து விரியட்டும் மனிதநேயம்
வெள்ளமாய் பரவட்டும் அன்பின் நேயம்.

ஆயிரம்பூக்கள் மலரட்டும்
அன்பின் சிகரங்கள் வளரட்டும்
மனிதநேயம் மலரட்டும்
மனிதங்கள் எங்கும் உதிக்கட்டும்.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# தீ நட்பு

## அதிகாரம் : 82




அன்பின் பெருக்கால்
அள்ளிப்பருகினும் அந்நட்பில்.
நற்பண்பிலாதிடின் அஃது
குறைந்து தேய்தல்நலம்.

தேவைக்கு நட்பாடிவிட்டு
பயனில்லென்றானதும் விட்டுபோகும்.
ஒத்ததன்மையிலாதோர் நட்பை
பெற்றலுமிழத்தலும் ஒன்றே.

பயனளக்கும் நண்பரும்
பொருள்தரமளக்கும் நட்பாடுவோரும்.
நம்பொருள் கவரும்
கள்வர்க்கு ஒப்பானவரே.

போர்கணத்தில் வீரரை
போர்க்களத்தில் தள்ளிவிட்டோடும்.
பரிகுணத்தோருடன் நட்பாடலைவிட
தனித்திருத்தலே நலம்.

காவலுக்கு ஆள்வைத்தும்
காப்பிற்காகா கீழ்மக்களின்.
நட்பை பெறுதலினும்
பெறாமலிருத்தலே நலம்.

அறிவிலாரின் பொருந்திய
நட்பைக் காட்டிலும்.
அறிவுடையோரின் நட்பின்மையே
கோடிமடங்கு நன்மைதரும்.

அகத்தில் அன்பில்லாது
புறத்தளவில் புன்னகைக்கும்.
தன்மையோரின் நட்பினிலும்
பகைஞரின்தீங்கே நலம்.

செய்யத்தகும் செயலையும்
செய்யாவண்ணம் கெடுப்போரின்.
நட்புறவை அவறறியாது
தளர்த்தி கைவிடல்நலம்.

செயலொன்றும் சொல்வேறாயும்
உள்ளோர் நட்பாடல்.
நனவிலும் கனவிலும்
துன்பமே தருவதாம்.

தனியிருக்கையில் நட்பாடலும்
பொதுஅவையில் பழித்துரைத்தும்.
தொனிப்போரின் நட்பை
சிற்றளவும் அண்டாதிருத்தல்நலம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# நானும் விழைகிறேன்

ஓடிப்பிடிக்கும்
குழந்தையின் கைக்குள்
பிடிபடாமல்
லாவகமாய் தப்பிக்கிறது
ஒரு பட்டாம்பூச்சி.



பட்டாம்பூச்சி போல்
குழந்தையின் கைக்குள்
பிடிபட விழைகிறேன்
நான்.

பட்டாம்பூச்சி போல்
வர்ணங்களுமில்லை
அழகுமில்லை என்னிடத்தில்.

நான் எதிர்பார்க்கும்
அத்தனை தோரணையும்
மிக நேர்த்தியாய் இருக்கிறது
குழந்தையிடம்.

குழந்தை
பட்டாம்பூச்சியாக
நான் குழந்தையாகிறேன்.

நான் குழந்தையான
பின்னர்
குழந்தையாய்
பட்டாம்பூச்சியைப் பிடிக்கவே
விழைகிறேன் நானும்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# தீரா உறவு

எவ்வளவு நம்பகமானது
ஆழ்ந்த அன்பின் நீட்சியானது
தீரா உறவின் தொடர்ச்சியானது

விடைபெறும் முன்
"வருகிறேன்"
என்று விடைபெறுவது

பிரிவினைக்குறுக்கி,
நேசத்தின் பாலத்தை
விரித்துக் கொண்டே செல்கிறது
அந்தச்சொல்!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# அம்மாவின் உருவில்

திருவிழாத் தெருவில்
தெய்வங்கள் வலம்வரும்
வண்டிகள் நீண்டபடியிருக்க
மாரியம்மனை வணங்க வேண்டி
மைல்கள் ஐந்து நடந்தபடியே
அண்ணனும் நானும்
அம்மாவின் விரல் பிடித்தபடி
வலம் வருவோம் பால்யத்தில்.
ரங்கராட்டினத்தில் வானம் ஏறுவது தொடங்கி
வண்ணங்களில் வழியும் ஐஸ்கிரீம்வரை
வறுமையின் ரேகை விரல்களில் தேய
வாங்க வழியின்றி
வேடிக்கை பார்ப்போம்.
அப்படியோர் ஆண்டில்
பெரு வெள்ளமென கூட்டத்தால்
பேருந்துகள் நின்று போக
பின்னிரவில் நடக்கின்றோம் வீடு நோக்கி.
நடுக்காட்டில் தென்னைமரங்கள் நடுங்க
வானம் இடிமின்னலை வெட்டிவீச
பாதையின் இருளில்
படிந்து கிடக்கிறது பயத்தின் நிழல்.
சொட்ட நனைந்தபடி
அம்மாவின் விரல்பிடியிலும்
அலறுகிறோம்.
ஏறி இறங்கும் கிணற்றுமேட்டின் பின்னே
மட்டையை வீசி ஓட வைத்தது தென்னை.
பேய் மழை பிடித்தாட்ட
ஒதுங்க ஏதுமில்லா
சூனியத்தில் சிக்கியபடி
வீடடைந்தோம்.
வணங்கிவிட்டு வந்த மாரியம்மன்
வாசல் வரை வந்தாள்
அம்மாவின் உருவில்
என்றே நம்புகிறோம் இன்றும்.



கவிஞர் இளையவன் சிவா

# இலக்கு

உனது கனவுகள் சிலருக்கு
கேலிக்கூத்தாக இருக்கலாம்..

உனது கனவுகளை
உன்னுடன் இருப்பவர்களே
உதாசீனப்படுத்தக் கூடும்.

என்னதான் நடந்தாலும்
யார் எத்தனை முறை
உன்னால் முடியாது என்று
கூறினாலும் பரவாயில்லை.



உனக்குள் இருக்கும் இலட்சிய
தீயை அணைத்துவிடாதே.
உனது கனவுகளை அடைய
நிறையவே போராடு..

போராட்டம் என்பது
திரும்பத் திரும்ப பயிற்சி கொடுப்பது
வெல்லும் இலக்குகளில்
வாழ்வின் அர்த்தம்  இருக்கிறது

நீ பிறந்த
தன் நோக்கம் இருக்கிறது.
நன்றி இறைவா!

கவிஞர் ஜெ. தேவிராஜசேகர், சென்னை

# கிராமத்து சொர்க்கம்

கொட்டி வைத்த கற்குவியல்
எட்டிப் பார்க்கும் எதிர் வெயிலும்
சூழ்ந்துள்ள தூறிஞ்சங்காடும்.

கொட்டும் மழையில கொட்டாயில நின்னுகிட்டு
இதமான ஈரக்காத்து
கண்ணு குட்டி முட்ட கம்முனு நில்லுடி
சின்ன கண்ணு என்ன உரிமையில பேச

ஓடுகிற வெள்ளத்தில கப்பலொன்னு
நேத்து வாத்தியார் எழுதி
போட்ட கணக்கு நோட்டு.
கணக்கில்லாத காகிதமா
கப்பல் ஆகுது .

உரிமையில பேச
ஒன்னு விட்ட பங்காளி
ரெண்டு விட்ட மாமா
இது எல்லாம் கிராமத்து உயிர்.

ஆடு புலி ஆட்டம்
அஞ்சாங் கல்லு கூட்டம்
ஆள தேடி ஓட்டம்
நொண்டி காலு ஓட்டம்
கோலி குண்டு கூட்டம்
மட்டபந்து தோட்டம்.



கவிஞர் தே. செ. பிரகாஷ், செஞ்சி

# கொற்றம் மலரும்

தென்னவர் முழக்கம் கேட்ட தெவ்வர்
அலறி நடுங்க இருள் விலகி
திக்கெங்கும் தமிழ்ச்சுடர் மிளிரும்
தீயேர் வீழ்ந்து தமிழ் நிமிர
தமிழர் கொற்றம் மலரும்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

# வாடகை தாய்

## என் உதிரம் நீயடா

நீ என்னில் இருந்து
தோன்றியவன்தான்
இருப்பினும்
சொந்தம் இல்லை
பந்தம் இல்லை
உறவும் இல்லை
உரிமை இல்லை
ஆனால் யாராலும்
மாற்ற இயலாத
என் உதிரம் நீயடா
வாடகை என்றாலும்
நான் உன் தாயடா



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்

# அடுக்கு மாடி குடியிருப்பு

தரைத் தளத்தில் அழகான வீடு.
ஆசையாய் தேர்ந்தெடுத்த
கிழக்கு பார்த்த வீடு.

தினமும் அரிசி மா
கோலம்.
தாமரைப்பூவும் கிளியும்
மயிலும் மானுமாக.

நன்றாகவே நடந்தது
குடி புகும் விழாக்கள்.
பின்னே வந்தது
பெரும் தலைவலி.

முதல் தளத்திற்கு
என் வீட்டு வாசல்
குப்பைத் தொட்டியாகியது
கோலங்கள் அலங்கோலம் ஆயின.

இரண்டாம் தளத்தார்கள்,
முற்றத்தை நீரிட்டு
சுத்தம் செய்ய,
என் வண்ணக் கோலங்கள்
அழுது அழிந்தன.

மூன்றாம் தளத்தார்
வளர்க்கும் செடிகளின் கழிவு
என் முன் வாசலில்.
யாரிடம் முறையிட்டாலும்
பதில் "நான் இல்லை" என்பதே.

இந்த இல்லம் விட்டு
எங்கே செல்வது?



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# முதுமைக் காதல்


முதுமையிலும் அன்பு நிறைந்தக் காதல்
முத்தங்கள் கொடுத்தாலும் ஆழமானக் காதல்
முகம் சுருங்கினாலும் இனிமையானக் காதல்
முதிர்ந்தாலும் பிரியாத ஈருலக் காதல்
முயற்சிக் கொடுத்த உண்மைக் காதல்
முயன்றாலும் ஊருக்கே வியக்கும் காதல்
முத்துக்கள் நிறைந்த எளிமையானக் காதல்
முழுவதையும் இரசித்த ஏற்றமிகுக் காதல்
முதல் பருவ ஐயமில்லாக் காதல்
முந்தானையோடு சேர்ந்த ஒளியானக் காதல்
முடிச்சைப் போல ஓடியாடியக் காதல்
முகம் கோண ஔடதமேக் காதல்
முழு மதியான பிரியாதக் காதல்
முதலிலும் இறுதியிலும் அணைத்தக் காதல்
மூப்பாயினும் காதல் ஆழமானது அழகானது
முகங்கள் சுருங்கிய நிலையிலும் காதல்
என்றும் அழியாத நினைவுகளோடு மலர்கிறது



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம், நாகர்கோவில்


# திரிசூல தெய்வமே போற்றி!

உமது அருள் பீடத்தின் அருகில்
தமது அதிகார மையத்தையும்
விண்ணை முட்டும்
தோரணைகளால் அலங்கரித்து
செருக்கு காட்டிய
கண்களுக்கும் இரங்கி
காட்சி தந்து அருளாசி தரும்
தர்ம தேவதையே போற்றி!
ஆயிரங்கண் நாயகியே போற்றி!
திரிசூல தெய்வமே போற்றி!



கவிஞர் ஆதின் ஆரா, அருப்புக்கோட்டை

வெள்ளை உடை அணிந்து வந்த
பெண்ணை தேவதை என்றழைத்த
உதடுகள் எல்லாமே.
அதே வெள்ளை உடை அணிந்த பெண்ணை
விதவை என்றும் அழைக்கிறது.
இங்கே வண்ணங்கள் எல்லாம் ஒன்றுதான்
ஆனால் எண்ணங்கள்தான்
வேறு வேறு.



கவிஞர் கு. ரமேஷ்குமார் @ ரமேஷ்யோகி, மதுரை

# அன்பின் அடையாளம்

அழைப்பு விடுக்காமல்
நேரில் வந்து வாழ்த்தும்



அடிக்கொரு தடவை உன்
நலம் விசாரிக்கும்

இன்பத்திலும் துன்பத்திலும்
உன்னோடு கைகோர்க்கும்

ஆபத்தில் தானாய் வந்து
தோள் கொடுக்கும்

நீயாகக் காயப்பட்டாலும்
தானாக உணர்வுகள் வலிக்கும்

தவறுகளில் காட்டிக் கொடுக்காது
தட்டிக் கேட்கும்

பாசத்தை ஒருநாளும்
பணத்தால் விலை பேசாது

ஏழ்மையில் உதவிடும் உன்
செல்வந்த வாழ்வில் மகிழும்

வெற்றிகளின் போது தன் தாய்
பெருமை கொள்ளும்

தோல்விகளில் பெரு மனதாய்
உனக்கு ஆறுதல் கூறும்

உடலால் பிரிந்தாலும் ஒருபோதும்
உள்ளத்தால் பிரியாது

ஆழத்தில் புதைந்த அன்பின்
அவதாரங்கள் இவை

இவையன்றோ அவனியில்
அன்பின் அடையாளங்கள்

கவிஞர் ஆய்ஷ், கம்பளை

# அவள்

ஒரு சில மனித மிருகங்களின்
பாலியல் வேட்டைக்கு நீ
நாள்தோறும் இரையாய்

வறுமையின் நிழலில்
உலர்த்திய உற்சாகமே

உந்தன் வாழ்க்கை கனவுகள்
கலைந்து போன மேகங்களாய்



பெண்மை தின்னும் வெறிப்பிடித்த
மாமிசப் பிண்டங்கள்
உலவும் உலகத்தில்

தேவதையே உந்தன் சிறகுகள்
உரசும் ஆசையில் கூட்டமாய்
மிருகங்கள்

உந்தன் உடை தாண்டி
பல கண்கள் உன் உடல்
தேடும் காம கழுகுகளாய்

பெண்ணே உந்தன் கற்பின்
கதைகள் நாளிதழ்களில்
தொடராய்

காக்கும் கடவுளும் உன் முன்னே
கண்களை மூடி
உண்டியல் காணிக்கையின்
சத்தங்களில் செவிடாய்

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# அவனை எழுப்பாதீர்

பஞ்சனை பாலனவன்
வஞ்சனையில்லா தட்சணையவன்
துஞ்சனையில் துயிலுகிறான்
மஞ்சத்திலே அவனை எழுப்பாதீர்



பத்து திங்கள் சுமந்த மகன்
பக்குவமாய் பெற்ற மகன்
பாரில் இருக்கும் துயர் அறியா
அமைதியுடன் துயில்கின்றான்
அவனை எழுப்பாதீர்

வருங்கால புயல் தனிலே
வருத்தங்கள் பல உண்டு
வழிக்கிட பழி உண்டு
வருகின்ற பெருந்துயரை
உணராமல் உறங்குகிறான்
ஆதலால் அவனை எழுப்பாதீர்

பணமில்லா பரதேசி என
பந்தியில் அமர்ந்தவனை
பாரபட்ச பார்வையோடு
பசியோடு பட்டினியாய்
பட்சிக்காமல் எழுப்பாதீர்

வேலையிலே துவண்டு
வேர்வையிலே உலர்ந்து
சோதனையால் நிறைந்து
வேதனத்தால் கசிந்து
வேர்க்கொடியாய் உறங்குகிறான்
அலுப்பு தீர அயரட்டும்
அவனை எழுப்பாதீர்

பல நாள் கனவுக்காய்
கண் விழித்து உறங்காமல்
மாரோடு மாரடித்து
மாய்த்து விட்டான் தோல்வியதை
மரு காலம் உறங்காத
மயக்கத்தில் துயிலுகிறான்
அவனை எழுப்பாதீர்

கலிகால உலகத்திலே
கல்லடிகள் போதுமென்றும்
களைத்தோடி முடிந்ததென்றும்
களிப்போடு கண் மலர்ந்து
கல்லான மனம் புதைத்து
கல்லறையில் துயிலுகிறான்
அவனை எழுப்பாதீர்.

கவிஞர் பி.வுட்ஷன், முல்லைத்தீவு (இலங்கை)

# நந்தவனமே அன்னமாய் வந்த தினம்

மாங்கனிச்சாறே மரகதப்பூவே
தெம்மாங்கு பாடிடவா
ஒன்னழகு கெறக்குதடி
மனசெல்லாம் பறக்குதடி



அத்தபெத்த ரத்தினமே
அழகான புள்ளிமானே
மீனாட்டம் நழுவுறியே
மானாட்டம் துள்ளுறியே

நெஞ்சுக்குள்ளே நீதானே
புரிஞ்சிக்கடி தேனே
ஓரக்கண்ணால பார்த்து
உசுப்பேத்திப் போறியே

ஒங்கூடத்தான் வாரேன்டி
சேர்ந்து போகலாமடி
களுக்குன்னு சிரிக்கையிலே
செதறுதடி மத்தாப்பு

கித்தாப்பு வேணாமடி
கிட்டத்தான் வாயேன்டி
சொக்கி நிக்கிறேன்
சொந்தம் கொள்வதெப்போ

நந்தவனமே அன்னமாய்
வந்த தினமே
இடுப்பு அசைவிலே
நாடியெல்லாம் துடிக்குதே

ஒய்யார நடையில
சிருங்காரம் தெரியுதடி
மாமரச் சோலையில
சந்தோசமாப் பேசிடலாம்

அக்கம்பக்கம் யாருமில்லை
வெட்கப்படத் தேவையில்லை
ஒறவுக்காரன் நானிருக்கேன்
மாலையிடக் காத்திருக்கேன்

கவிஞர் ஜெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# யூகிக்கும் யோகியாய்

உள்ளதைக் கொண்டு உள்ளம் திருப்தி பெற
யூகித்துச் செயலாற்றும் யுக்தியைக் கற்றிடு

வருகின்ற பொழுதுகளை மனதார வரவேற்க
வரவை மீறிய செலவுகளைத் தவிர்த்திடு

உறவுகளின் பொய்முகங்களை அறியும் திறன்பெற்று
அவனியில் பயணித்திடும் உயிர்ப்பைப் பெற்றிடு

சவால்கள் நிறைந்த இப்புவி வாழ்வை
சாதனைக் களமாக மாற்றிடத் துணிந்திடு

தேவைக்கு அழைத்துத் தேகத்தை வதைக்கும்
பச்சோந்திகளின் வலையில் சிக்காதிருந்திடு

ஐம்புலன்களையும் அடக்கியே ஆளுகின்ற
அறிவு ஆற்றல்களைக் கருத்தாய் வளர்த்திடு

இன்னல் நிறைந்த இன்றைய வாழ்வில்
யூகித்துத் திட்டமிட்டு யோகியாக வாழ்ந்திடு



கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், இலங்கை

# உயிரற்றதும் உயிர்பெற்றதும்

நான் எழுதும் கவிதையும் உயிரற்றது
நான் கவிதை எழுத
பயன்படுத்தும் பொருட்களும் உயிரற்றது
அதனால் தானோ என்னவோ
உயிர் உள்ள நானும்
உயிரற்று ஊஞ்சலாடுகிறேன்
உனக்காக உன்னுடன் உயிர் பெற்று வாழ.



கவிஞர் இரா. சங்கர், ஈரோடு

கற்பனையில் கருவாகி
எண்ணத்தில் நிறைந்து
உயிர் மூச்செனக் கலந்து
பிறந்த கவிதை!
தாய்மொழியில் கோர்த்துக்
கட்டிய முத்துமாலை!
நம் நெஞ்சமதில் உலவிடும் காதலாக!
தனிமையைக் கொல்லும் அமுதமாக!
வறண்ட மனதின் வலிகளாக!
மௌனத்தின் அழகைச்
சொல்லும் மொழியாக!
கற்பனையில் காணக் கிடைக்காத
காட்சியெல்லாம் நம் கண்முன்னே
காட்சிப்படுத்தும் கவிதைகள்!
கவிதைக்குப் பொய் அழகு
உணர்வுகளில் கலந்திட்ட கவிதைகள்
விவரிக்கும் வார்த்தைகளில்
உயிர் கொண்டு போகுதே
கவிதைகள்!





கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# அடைமழை



வீட்டுக்குள் முடக்கி முதுகை உயர்த்த விடாமல்
முனங்கிக் கொண்டிருக்கிறது
இயற்கையின் மாறுதல்களால் மயங்கிப்போன
காலநிலை நடுக்கடலில் தத்தளிக்கிறது

உயிர்கள் உடம்பை அசைத்திட இடமில்லை
மழைநீர் வரம்பிட்டு
உள்ளத்தை ஒரு நொடி நிறுத்தி விடுகிறது
கண்ணீரும் காணவில்லை
நனைதலின் சோகமுகவரி கழுத்து வரை நிரம்பி உள்ளதால்

தேடலின் வாசல் படி தடுப்புச்சுவரால்
பசியின் கொடுமை உடலை மட்டுமல்ல
உணர்வுகளைக் கசக்கி விட்டு பதம் பார்க்கிறது

கனவுகளுக்குள் கதறல்கள் ஓலமிட்டபடி
ஒடுக்கப்பட்ட நினைவில் நெருக்கடியில் உள்ளம் ஊனமுறுகிறது
அனர்த்தங்களின் அசைவுகள் குடிசைகளை காணமலாக்கி
மாடிகளை நிறைத்து நிம்மதி கொள்கிறது

அபலைகளின் அழுகுரல் வயிற்றுப் பசியைத் தணித்து விடுகிறது
பிஞ்சுக் குழந்தைகள் பிணியால் சுருண்டு படுத்துறங்கிறது
பள்ளிக்குச் சென்ற பிள்ளை திரும்பவில்லை
பாலங்கள் எல்லாம் உடைந்து சிதறல்களாய்

தேடியும் கிடைக்கவில்லை சடலங்கள்
அமாவாசையாக்கப்பட்ட எதிர்காலக் கனவுகள் திரையிடப்பட்டு
விடியலின் ஓரத்தில் பிரார்த்தனைகளோடு ஒதுங்கி நிற்கிறேன்

கவிஞர் சேஹு மொஹம்மது பௌஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# புத்தகம்

பக்கங்களில் நிரம்பி வழிவது வார்த்தைகளல்ல!
ஒவ்வொரு வார்த்தையிலும் வழிவது அறிவு!
உறவுக்கு பிரிவிட்டு தனிமையில் படிப்பதல்ல!
தனிமையிலேயே உறவை உணர்த்தும் உணர்வு!

வெறும் காகிதம் என்று எண்ணினாயோ?!
காலத்தின் வரலாற்றை கனிவாய் எடுத்துரைக்கும்!
எண்ணற்ற கற்பனையை தன்னுள்ளே அடக்கி
ஆழ்மனதையும் வருடும் அழகிய ஓவியம்!

வெள்ளைத் தாளாய் இருக்கும் மனதினையும்
வண்ண ஓவியமாய் மாற்றிடும் அறிவுக்களஞ்சியம்!
அறிவுப் பசியைத் தூண்டிடும் அற்புதம்!
தனிமையையும் இனிமையாக்கும் ஈடில்லா துணைவன்!

மலர்களைப்போல் வாடாமல் மறுபடியும் உயிர்த்தெழுபவன்!
எழுதியவன் மரித்துப்போவான் எழுத்துக்கள் மரிப்பதில்லை!
உன்னைத் தலைகுனிந்து பார்த்து படிப்பவரை
உலகின் தலைசிறந்தவராய் மாற்றுவதே உன்சிறப்பு!



கவிஞர் ரா. ஜோதிமணி, தாராபுரம்

# மகிழ்வின் தொலைவு

கனவிற்கும்
எதார்த்தத்திற்கும்
இடைப்பட்ட தொலைவுதான்
வாழ்வில்
மகிழ்ச்சியைத்
தீர்மானிக்கின்றன.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# நீயும் நானும்

நான் எல்லாவற்றிலும் சரியாக இருப்பேன்
நீயும் என்னைப் போலவே இருந்துவிடு
என்பதா புரிதல் உள்ள வாழ்க்கை ?
இதுவா இல்லறம் காத்திடும் நல்லறம்?

சிலவேளை நான் தவறும் போது மன்னித்துவிடு
பலநேரம் நீ தடுமாறும் போது நான் பொறுத்திடுவேன்
சில தவறுகள் வாழ்நாள் முழுவதும் செய்ய நேரலாம்
பலவற்றை இருவரும் எளிதில் சரிசெய்யலாம்



இருவரின் குறைகளையும் நமக்குள் வைப்போம்
ஒருவர் விழுந்தாலும் மற்றவர் தாங்கி பிடிப்போம்
சினிமாவும் சீரியலும் இல்லை வாழ்க்கை
நிஜத்தின் வலிகளை நிதர்சனமாய் உணர்த்திடும்

எப்போதும் பிணைந்தே இருப்பதில்லை நிஜம்
பலவேளைகள் பிரிந்தே ஒற்றுமையாய் பயணிக்க வேண்டிவரும்
எப்படியாயினும் நீ மட்டுமே எனக்கானவன்
நான் மட்டுமே உன் இதயம் புரிந்தவள்

தேவதையாய் வலம் வராவிடினும் தேவையை நிறைவு செய்வேன்
உயிருடன் இருக்கும் வரை உனக்காக உன்னோடிருப்பேன்
உன் அருகாமையை மட்டும் என் ஆயுள் வரை தா
வேறென்ன வேண்டும் வேராய் நீ இருக்கையிலே

நமக்குள் சண்டையிடுவோம் சத்தமாய் தவறேயில்லை
சடுதியில் இணைந்திடுவோம் அனைத்தையும் மறந்து
என் தவறுகளை உன்னைவிட யார் மாற்றமுடியும்?
உன் குறைகளை நான் நிறைவாக்கிட முடியும்

இதுவரை போனது போகட்டும் இனியாவது இப்படி வாழ்வோம்
இங்கு எவரும் நிறைவானவர்கள் இல்லையே
குறைகளை பெரிது படுத்தாதவர்களே முன்னேறுகிறார்கள்
எனக்காக நீயும் உனக்காக நானும் இப்படியே வாழ்வோமா?



கவிஞர் பி. ரோஜாராணி, தேனி

# தமிழே அமுதே வாழி

நாவினிக்க சொல்லாடும்
தாய்மொழி தமிழே
மனமும் மயங்கி தினமும் தேடும்
செம்மொழியே
எத்திசையும் வலம் வரும் செந்தமிழே
இன்பத் தமிழே இசைபாடும் தமிழே
திகட்டாத செந்தேனே
சிருங்கார செந்தமிழே
தேன்மழை சாரலாய்
தித்திக்கும் தமிழே
வண்ணத்தமிழ் எடுத்து
வார்த்தை கோர்த்திடவும்
பொற் களஞ்சியமே பொன்னாரத் தமிழே
தரணியிலே தவழ்ந்திடும் தனித்தமிழே
தீர்ந்திடுமோ இப்பிறவியிலே
மின்னலாய் மூளைக்கும்
மின்னி மறையும்
உன் தூண்டலின் ரகசியத்தின் மொழியிலே
கவிமொழி படைத்திட காந்தமாய்
இழுக்கும் தமிழே
கற்பனைக்கு காற்றுப்போல்
உன் மொழியும்
ஊற்றென பொங்கிடும் உன்னத தமிழே
மனதோரம் தூரிகை கூடாரம்
தமிழால்
அமுதசுரபியென குறையாத களத்திடலே
தமிழே தமிழே அழகிய தமிழே
தமிழே அமுதே வாழிய தமிழே
தமிழே வணக்கம் தங்கத்தமிழ்
சொல்லே வணக்கம்




கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# கருவாயன்

அருவாய் என்னுள்
அமர்ந்தாய் நீ
உருவாய் என்னுள்
மலர்ந்தாய் நீ
திருவாய் என்னை
ஆட்கொண்டாய் நீ
கருவாய் எழுத்தில்
வந்தாய் நீ



கார்மேகமாய் வந்து
கருமேகமானவனே
ஆர்த்தெழும் கவியை
அலங்கரிப்பவனே
ஓரங்கமாய் என்னுள்
ஓடுபவனே
சீரங்கமாக சிந்தையை
ஆள்பவனே

திருவாயால் நீமொழிய
கீதையாகும்
கருவாயன் நீநடக்க
பாதையாகும்
அருவான மாயங்களால்
பேதையானேன்
உருவமதை தியானித்தே
போதையானேன்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

குழந்தைகளின்
கனவுகளில்
அரண்மனை கட்டும்
பெற்றோர்களின்
பொறுப்பில்
கடற்கரை
மணல் வீடுகளும்
கலந்து
கொள்கின்றன



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# வாழ்க்கை வழி மிகுந்தது

வாழ்க்கை வழி மிகுந்தது எழில் மிகுந்தது
வாழ்க்கை ஏற்றமிகுந்தது அன்பு நிறைந்தது

வாழ்க்கை அலாதியானது அற்புதமும் அதிசயமும் நிறைந்தது
ஆனாலும் வாழ்க்கை வலியும் மிகுந்தது ரணமும்நிறைந்தது

ஏற்ற இறக்கம் வாழ்விலே சுற்றும் சக்கரம் போலவே
இந்த வாழ்வின் துயரம் கூட கோடைகால மேகம் போலே
களைந்து போகும் உண்மையே.

வாழ்க்கை என்னும் *வழுக்கு மரம்* பல பேருக்கு *சறுக்கு மரம்*
ஆனாலும் வழி மிகுந்த பாதைகள் வாழ்வில் ஆயிரம் உண்டு.



வாழ்க்கை என்பது கடல்தான்; ஆபத்து அதில் அதிகம்தான்
ஆபத்தோடு அதிசயங்கள் அதிலும் ஆயிரம் உண்டு.

மூச்சடக்கி *முத்து எடுக்கும்* துணிவு மட்டும் இருந்தால்
வாழ்க்கை என்ற சொர்க்கத்திற்கு ஆயிரம் வழியுண்டு.

வாழ்க்கை இனிமை மாறா *தேனின் சுவை* போன்றது
உண்மை தெளிவு நிறைந்தது காலத்தின் வடுக்களை மாற்றிடும்
மந்திரம் வாழ்க்கைக்கே உண்டு.

உண்மை நேர்மை அன்புடன் உழைக்கும் வலிமை மனதிலே இருக்கும்
மனிதன் வாழ்வுதான் வைரமாய் ஜொலித்திடும் உண்மையே.

வலி மிகுந்ததுதான் ஆனாலும்;
*வாழ்க்கை வழி மிகுந்தது*

கவிஞர் ஜேப்பி@ பன்னீர் செல்வம், தேத்தியாதோப்பு

# ஆண்டாள் 029

## நாச்சியார் பத்தாவது திருமொழி

### கார்க்கோடல் பூக்காள். 06முதல் 10வரை 005

நாச்சியார்தம் பத்தாவது திருமொழியாம் கார்க்கோடல்
பூக்காளின் ஆறாவது பாசுரத்தில் கூடியுள
கோலமாமயில் வடிவத்தில் அழகதனில் கண்ணனொப்பே!
நாட்டியத்தை பழகியதால் ஆடுகின்ற திருவடிகளை
வீழ்ந்துவணங் காண்டாளோ ஆட்டத்தை நிறுத்திடவே
வேண்டுகிறாள்! படமெடுத்து ஆடுகின்ற அனந்தாழ்வான்
படுக்கைதனில் பள்ளிகொண்ட பெருமாள்தன் பெருமைதான்
தாள்வீழ்ச்சி காட்டியதே என்றுரைத்தாள் கோதையவள்!
ஏழாவது பாசுரத்தே குடக்கூத்தன் எம்பெருமான்
துன்புறுத்தும் பாங்கேபோல் ஆடுமயில் ஆட்டமது
கவர்வதுவாய்க் காட்சிதரல் தக்கதுவோ என்றவினா
தொடுத்திடுவாள்!எட்டாவது பாசுரத்தே எல்லாமும்
நலிவிக்க வான்மழையும் துன்புறுத்த கண்ணீர்தான்
துளிர்த்தலன்றி வார்த்தைசொல இயலாமை கொண்டிருத்தல்
பகர்வாளே! உளத்துள்ளான் அணைப்பாலே சேர்ந்திடவே
பொழிந்திடவே மழைதன்னை வேண்டுவளே! ஒன்பதிலே
அலைகிளர்ந்தெழு கடல்நோக்கி கடைந்துகலக் கியுட்புகுந்து
அமுதுற்ற மாயபிரான் என்னுள்ளே தான்புகுந்து
உயிரறுப்பான் தன்னிடத்தே தன்துயரை அநந்தனிடம்
சென்றுரைக்க வேண்டிடுவாள்!பத்தினிலே தன்னினுமே
கலக்கமுற்ற தோழிக்கு ஆறுதலைச் சாற்றுவளே!
அனந்தசயன ஸ்ரீகாந்தன் பெருஞ்செல்வன் மாப்பெரியன்
பெரியாழ்வார் அழைப்பாலே காட்சிதரில் சேவிப்போம்
நாமென்றே நம்பிக்கை உரைப்பாளே!பத்தாவது
திருமொழிதான் முற்றிற்று!பதினொன்று "தாமுகக்கும் "
பக்திபற்று மிக்குடைய மாதரார்க்கு காட்சிதரல்
வேண்டுவளே! பத்துடைத்து சுவைத்தற்கே! கோதைதமிழ்
நாரணனார் பக்திதனை நம்முளத்தே மிகுவிக்கும்!
வில்லிபுத்தூர் வடபத்ர சாயிமுதலா அரங்கனுமே
ஈறாக இலக்கெய்து தன்மையாளின் தாள்காப்பே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# குடிமக[ணவ]னுக்கு

காலை வெளியே சென்று
காரிருளில் வீடு வரும் குடிமக(ணவ)னுக்கு

காத்திருந்த மனைவிக்கு
காரசாரமான தீ சொற்களோடு



காரி உமிழ்ந்த துர் நீரும்
காயங்களோடு அடியும்

காட்டமாக கிடைத்ததே
காலையில் எழுந்ததும்

காணாமல் போனதே
காடனாக தான் நடந்த யாவையுமே

காட்டியா கொடுப்பாள் பாவியும்
காதலன்புக்கு மட்டும் ஏங்குபவளுக்கு
காலம் கொடுக்கும் பரிசு இதுதானா!

காண்பவருக்கோ வேடிக்கை
காகிதமாய் கிழிபவளுக்கோ வாடிக்கை

கால் கை நோக குடும்பத்திற்காக
காலங்காலமாக உழைப்பவளுக்கு

காதுகளிலோ நாரச வார்த்தை
காவியமாக கணவனின் போதை!

தயவு செய்து சகோதரர்களே உடல்வலி தீர குடிக்கும்.நீங்கள்.உங்களைச் சார்ந்தவரின் வலியும் தீர உங்களால் அவர்களுக்கும் கொடுத்து குடிக்கமுடியுமா?ஏன் இந்த குடிப்பழக்கம்.. கஷ்டப்பட்டு சம்பாதித்து பணத்தை கஷ்டபடாமல் குடித்து உடலை கெடுத்து,உயிரை எடுத்து.. அன்புக்குரியவர்களையும் உயிரோடு எறிக்கிறீர்களே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# வெற்றி



கனவை நனவாக்கி
உழைப்பை உரமாக்கி

பாதகத்தை சாதகமாக்கி
அன்புதனை அழகாக்கி

முயற்சியை மூலதனமாக்கி
சோதனையை சாதனையாக்கி

பயிற்சியுடன் முயற்சியையும்
ஒன்றாய் சேர்த்திங்கு

தினமும் செயல்படுத்தும்
ஒவ்வொரு நாளும் வெற்றிதானே!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# உழவர் நிலை உயராதோ?

முப்போகம் விளைந்த நிலங்கள் பலவும்
இப்போது குடியிருப்பாய் மாறி நிற்கிறதே!
நீரின்றி தரிசான நிலங்களில் வேருன்றி
நிற்கின்ற புற்களை கால்நடைகள் மேய்ந்து
பசியாறும்! விவசாயத் தொழிலைத் துறந்து
விவசாயி வேறுதொழில் செய்கின்ற நிலையின்று!
இயந்திரங்களின் வரவால் உழவில் கால்நடைகள்
பயன்பாடு குறைந்தது இந்நாளில்! நடவுக்கு,
அறுவடைக்கு, களைபறிக்க ஆள்வராத அவலநிலை!
சிரமங்களைத் தாங்கி விவசாயம் செய்தாலும்
உரிய விலை போகாத விளைபொருட்கள்!
பெருமழை பெருவெள்ளம், வறட்சியின் தாக்கம்
பருவமழை பொய்த்தல் இவைகளின் பாதிப்பால்
வறுமையில் வாடும் விவசாயி ஒருபுறம்!
பெரிய கடைகளில் பேரம் பேசாது
அதிகவிலை கொடுக்கும் நுகர்வோர்கள் மறுபுறம்!
இருவருக்கும் இடையில் கொழிக்கின்றார் இடைத்தரகர்!
அரசாங்கம் முயன்றால் மாறாதோ இந்நிலையும்!
உலகுக்கே சோறிடும் உழவர் நிலையுயராதோ?



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# இவன்

வலிகளின் வரிசையில்
வயதானவன்.
விழிகளில் வீழ்ந்திடும்
துளியானவன்.
விதியின் பிடியிலே
பலியானவன்.



பல
குழிகளில் வீழ்ந்தும்
நிலையானவன்.
வழித்துணை இல்லா
வழிப்போக்கன்.
கிலியே இல்லா
வாலிபன்.

கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# நெஞ்சு பொறுக்குதில்லையே

பொய்யும் புரட்டும் புகுந்தே இங்கு
புழுக்கள் போல புரள்வ தென்ன
மெய்யை விடுத்து மிடுக்காய் நடித்து
மேலோர் வேடம் மிளிர்வ தென்ன?
உய்வை உடைக்கும் ஒழுக்க மின்மை
உயர்வாய் உலகம் உரைப்ப தென்ன
தொய்வில் தோய்ந்து தொன்மைப் பண்பும்
துளையில் தொலைந்து துடிப்ப தென்ன



வாய்மை மறந்து வளத்தை தேடும்
மதியை மறைக்கும் மதுவில் நாட்டம்
ஆய்ந்தே அறியும் அறிவும் வாட்டம்
ஆக்கள் ஆகி அலையும் கூட்டம்
பேய்போல் பிடியை பெரிதாய் வைத்தே
*பிளையில் பிழையை பின்னும் வாழ்வும்
நோய்தான் நோய்தான் நொடியச் செய்யும்
நொந்து நோகும் நிமிரா எண்ணம்

கொஞ்சம் கூட குணமும் இல்லை
கொஞ்சும் குழவி குரூரம் ஆக்கி
பிஞ்சு பிள்ளை பிய்த்து தின்னும்
பித்து பிசாச பிறப்பைக் கண்டால்
வஞ்சம் வன்மம் வகையாய் வளர்த்து
வாழ்வின் வழியை வடிப்போர் நினைத்தால்
நெஞ்சு பொறுக்கு தில்லை அப்பா
நெருப்பில் பொசுக்க வேண்டும் அப்பா

*பிளை - அடுக்கு

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

# சொட்டும் நினைவிலும் நீயே



கொட்டும் மழையும்
வெட்டும் வெயிலும்
திட்டும் வார்த்தையிலும்
கேட்கும் பிரார்த்தனைகளில்
நீயே!

வீசும் குளிரிலும்
பேசும் வார்த்தையாகிடாதோ
உனதென நானாகாதோ!

தேடல் தீரா ஏக்கம் நீயே
மறுக்கவே முடியாத
நியாபகங்கள் நீயாகிறாய்.

நெருகும் வார்த்தையில்
பிடித்தத்தேர்வாய்
உன்னையே வேண்டுதே
நெஞ்சம்.

கஞ்சமோ நெஞ்சிலே
கொஞ்சமும் இல்லையே.
பஞ்சமாகி தானாகிறாய்
நீனும் கண்ணிலே காணாது.

வெண்ணிலா வெளிச்சமும்
வெண்மேகக்கூட்டமும் இடைநடுவே
போடும் கண்ணா மூச்சென
நீயாகிடுகிறாய்.

நீளும் காலமே
நீனும் வந்து வந்து போகிறாய்
நெஞ்சினோர விட்டுவிட்டு
துளிர்க்கும் வலி தந்து
நொந்து போகவே.

நீண்டு நீண்டு போகிறாய்
கண்ணில் காணாமலே
காத்திருந்தால் பூர்த்து
போகிறதே நேக்கும் ஏக்கம்.

பிறக்கும் ஆசையில்
வினையாகும் நெஞ்சின் கூடோ
வலிப்பதார் ரரிவாரோ.

நீ யறியாமலே
யாரறியக் கூடுமோ
தீரா தேடலில் நீயாகிடும்
நொடிகளே அதிகமாகிறதே.

சாபச்சோபனம் தீர்த்து
கண் முன்னே தோன்றி விடு
வாழ்கிறேன் மூச்சி ருக்கும் வரை
உனதன்பினை பெற்று.

கவிஞர் சஷீனாஸ் பேகம், இலங்கை

# எம்மானுள்ளத்தில் போலியோ

ஆலமரஜயன் வெட்டியெறிந்தக் குலக்கொடியை
அள்ளியணைக்கும் அம்மத்தாக்குச்சி
மீண்டும் குமரிபூமரமாய்ப் பாடுபட பாடுபட
தளிர்த்துப் படரும் கொடியில் கல்விக்கனி

மழையப்பா எட்டிப் பார்க்காதப்
பாலைகுழந்தையின் பால்நெஞ்சமெல்லாம்
பாளவெடிப்புகள் பாளவெடிப்புகள்
நுந்தை எவனென்று ஏசுமூர் மக்களுக்கு
முருகன் முகத்தைத் திரையில்விரித்து
முறுக்கி நிற்கும் திருக்கார்வானம்

இலையுதிர்காலத்தில் உதிர்க்காதப் பனையிலையே
வசந்தகாலத்தில் சிந்தாத சில்லரைப்பூவே
நஞ்சுமர ஆஞாவின் அகவேரும் புறக்கிளையும்



கடலளவு பொருள்நீரிருந்தும்
கடமை பங்குமதகுத் திறக்காதக்
காவிரிஅணை குடும்பனுக்குக்
குடும்பப் பாடமெடுத்துப் பாடமெடுத்துக்
கிழண்டு போன பூமி ஈன்றாள்
உயிர் வேரைக் கோடாரியால் வெட்டிவிட
சாயும் அர்த்தமற்ற ஆண்மரம்

ஊதைக்காற்றைக் குடித்துக் குடித்து
ஊதிக் கொண்டிருக்கும் பாலைசோலையில்
மேகவெடிப்புப் பாசமழைக்குக்
காத்திருக்கும் புட்டமுது பிள்ளையிடம்
கேதச்செய்தி வாசிக்கிறது
கிழக்கிலிருந்து மூச்சிறைக்க
ஓடித் தேடிவரும் உறவுக்காரக் கதிரவன்

குருதி எப்படிக் கொதிக்கும்.

கவிஞர் ஸ்ரீனி. முத்துவேல், துபாய்

# அத்தியாயம் -1

## பழனியும் துப்பாக்கியும்

பழனி ரயில்வே நிலையத்தில் அங்கும் இங்கும் பார்த்தப்படி நின்றுகொணடிருந்தான். இரவு எங்கும் இருட்டை அப்பிவைத்திருந்தது.



ஆங்காங்கே தொங்கிக்கொண்டிருந்த விளக்குகள் இருட்டை விரட்ட முயற்சித்துக்கொண்டிருந்தன. பனி விழுந்து தூரத்தில் நின்று கொண்டிருந்த மரங்களின் இலைகளில் நீர் முத்துக்கள் விளைவித்துக்கொண்டிருந்தன. ரயில் வருவதற்கு இன்னும் நேரமிருந்தது. தன்னையும் அந்த பிளாட்பாரத்தில் தூங்கிக்கொண்டிருந்த ஒரு நாயையும் தவிர. அந்த இரயில்வேஸ்டேஷனில் யாரும் தென்பட்டதாகத் தெரியவில்லை பழனிக்கு.

கொஞ்சம் பனி அதிகமாக விழ ஆரம்பிக்க தன் பெட்டியைத் திறந்து மப்ளரையும், ஸ்வெட்டரையும் அவன் எடுத்துக்கொண்ட போது உள்ளே இருந்த சிறிய கைத்துப்பாக்கி பளப்பளத்தது.வேகமாக சூட்கேஸை மூடிவிட்டு ஸ்வெட்டரை அணிந்து கொண்டு அருகேயிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்த போதுதான் அவர்கள் இருவரும் ஓடி வந்து கொண்டிருந்தார்கள்.

பழனி எழுந்து பார்த்தபோது ஒருஆணும் பெண்ணும் மூச்சிறைக்க ஓடி வருவது தெரிந்த்து. அருகில் வரும் போது தான் தன் ஊரிலிருந்து தங்கபாலுவும் கோமதியும் வருகிறார்கள் என்று புரிந்தது.

பழனியை இரயில்வே நிலையத்தில் பார்த்ததும் இருவரும் திகைத்துப் போய் நிற்க பழனி எழுந்து வந்து தங்கபாலுவிடம் ''அரசல்புரசலாககேள்விப்பட்டேன். ஆனால் நீங்கள் ஓடிப்போகிற அளவிற்கு காதல் வளர்ந்து விட்டது என்று தெரியாது. அது சரி எங்கே போகலாம் என்று உத்தேசம்'' என்று கேட்டான்.

'என்ன செய்யட்டும்? எங்க அப்பன் ஆத்தாவிற்கு நான் கோமதியைக் கல்யாணம் பண்ணிக்கனும்ணா பிடிக்கலை. அவளோட அண்ணனும் மூக்கனுக்குத்தான் கோமதியைக் கட்டி வைப்பேன்னு ஒத்தக்காலிலே நிற்கிறான்.

கவிஞர் இராஜகைநிலவன்

வேறவழியில்லை. ஆமா பழனி நீ எங்கே இந்த ராத்திரியிலே கிளம்பியிருக்கிறாய்?''

''மெட்ராஸிற்கு.''

''என்ன விசயம். அதுவும் உன்தங்கை இறந்து நாலு நாள் கூட ஆவல்ல. உங்க அம்மாவிற்கு ஆறுதல் சொல்ல வேற யாரு இருக்காங்க?''

கொஞ்சம் அவசரமாக ஒரு சொந்த வேலையை முடிக்கணும். அது தான் அம்மா கிட்ட சொல்லாமல் கிளம்பிட்டேன்.'' என்று பல்லைக் கடித்துக் கொண்டே சொன்னவன் தன் கோபத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் ''எங்கே போகிறாய். இனி கோமதியை கூட்டிக் கொண்டு போய் என்ன செய்யறதா உத்தேசம்?

''வேற எங்கபோறது. கழுதை தேஞ்சா கட்டெறும்புதான். மெட்ராஸில் நம்ம மச்சானுக, சகலபாடி கிருஷ்ணன் கொறுக்குப்பேட்டையிலே இருக்கான். போயி அவனப் புடிச்சு மொதல்ல ஏதாவது ஒரு கோயில்ல கோமதியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும்.கெட்டும் பட்டணம் போன்னு பெரியாட்கள் சொன்ன மாதிரி நம்மோட எஸ்.எஸ்.சி சர்டிபிகேட்டை வச்சிகிட்டு வேலை தேட வேண்டியதுதான். நீ எங்கே தங்கப் போறே.''

''எனக்கு மெட்ராஸ்லே ஒருத்தரையும் தெரியாது. அது தான் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.''

''நீ ஒண்ணு பண்ணு.எங்க கூட வந்துடு. அவன் வீடு கடல் மாதிரி கெடக்கு, உன் வேலை முடிஞ்சவுடனே நீ திரும்பிடு.

''அதுவும் சரி தான்.'', ''நாங்க எங்கே போயிருக்கோம். எங்கதங்கியிருக்கோம்னுட்டு யார்ட்டேயும் சொல்லிடாதீங்கண்ணே.'' என்றாள் கோமதி.

''கவலையே படாத. நான் யார்கிட்டேயும் சொல்ல மாட்டேன்.ஆமா டிக்கட் எடுத்தியளா?'' என்றான் பழனி.

அத்தியாயம் -1

## பழனியும் துப்பாக்கியும்

''இரயில்லே வரக்கூடிய கண்டக்டருகிட்ட தண்டம் கட்டி டிக்கட்டு எடுத்துக்க வேண்டியதுதான்.'' என்றான் தங்கபாலு.

இரயில் வந்து நிற்க, மூவரும் ஏறிக்கொண்டு உட்காருவதற்கு இடம் தேடி உட்கார்ந்தார்கள்.

'செத்த இருங்க. முகம் கழுவிட்டு வாரேன்.'' என்றவாறு எழுந்த தங்கபாலு, பழனி வார அவசரத்துல துண்டு எடுக்க மறந்துட்டோம். நீ கொணாந்திருந்தா கொஞ்சம் குடேன்.'' என்றான். பெட்டியை இழுத்து திறந்த பழனி டவலை எடுக்கவும் அழகாக உறங்கிக் கொண்டிருந்த பிஸ்டல் வெளியே தெரிய ''என்ன பழனி துப்பாகியெல்லாம் வைச்சிருக்க?'' என்று கேட்டான் தங்கபாலு.

''அது சும்மா விளையாட்டு துப்பாக்கி. யாரிடமும் என் கிட்டே பிஸ்டலை பார்த்ததைச் சொல்லி விடாதே.'' என்றான் பழனி.

''எனக்கெதுக்கப்பா வம்பு.'' என்றவாறு டவலை வாங்கிக் கொண்டு பாத்ரும் நோக்கி நடந்தான்.



தொடரும் ...

கவிஞர் இராஜகைநிலவன்

# ஒரு விவசாயியின் கனவு



தமிழ் முகில் இரஜகை நிலவன்

கட்டுரைகள் அவரது எண்ணங்களும் எழுத்தும் பிணைந்து உணர்ந்து ஆய்ந்து எழுதப்பட்டிருக்கிறது. எழுத்துக்கலைக்கு உள்ள சிறப்பு ஒன்று என்னெவென்றால் படைப்பாளியின் உணர்வுகளை படிப்போரின் மனக்கண்ணில் காட்சியாகக் கொண்டு வரும். ஆசிரியர் வேறுபட்ட இடங்களில் உள்ள பொருட்களை ஓரிடத்தில் கொணர்ந்து அழகு படுத்தி சுவைக்க வைத்திருக்கிறார். அவர் உள்ளம் விழைந்தவாறு நாம் சிந்திக்கும் வகையில் தந்திருக்கிறார். படைப்பாளி கவியுணர்வு நிறைந்தவர் என்பதால் உரைநடையில் சொற்களை ஆளும் திறன் வெளிப்படுகிறது.

கட்டுரையில், கனவுகள் நிஜத்துக்குள் நுழையாமல் கானல் நீராகவே மறைந்து விடுகின்றன. எதிர் நீச்சல் போடவே தயங்கி, நோக்கமில்லாமல் ஏதோ இருக்கின்றார்களே தவிர வாழவில்லை என வருந்தி வலியுறுத்தி இருப்பது வளரும் இளைய சமூகம் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.



# நீரில் பூத்த நெருப்பு

நூல் அனுபவம் — கவிதைத் தொகுப்பு

கவிஞர் கடத்தூர் ஜெயராமன்
வெளியீடு வானவில் மின்னிதழ் மடத்துக்குளம்
முதல் பதிப்பு ஏப்ரல் 2024
பக்கம் 80; விலை ரூபாய் 60
தொடர்புக்கு 63853 28252




தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் மடத்துக்குளம் கிளையின்தலைவராகச செயல்படும் கடத்தூர் ஜெயராமன் அவர்களின் முதல் கவிதைத் தொகுப்பு இது.

கவிதை தனக்கு அறிமுகமான காலத்திற்கும் கவிதையை அவர் உலகுக்கு அறிமுகம் செய்த காலத்திற்கும் இடையேயுள்ள தூரத்தை இதில் உள்ள கவிதைகள் கோடிட்டுக் காட்டுவதோடு நில்லாமல் அவற்றை இணைக்கும் பாலமாகவும் செயலாற்றுகின்றன. மரபின் தமிழ்ப்பாலருந்தி தமிழன்னையின் சிறப்பெனத் திகழ்ந்திடும் இலக்கண மரபில் கவிதை பயின்ற இவர் இன்றைய நவீன கவிதைகளோடு தன்னை இணைத்துக்கொண்டாலும் பழமையின் சுவையில் எழுதியிருக்கும் கவிதைகளில் புதுமையும் நடைபோடுகிறது.

தன்னை வளர்த்து தரணியில் மனிதனாகவும் மதிப்புமிக்கவனாகவும் உலவவிட்ட தமிழுக்கு வணக்கம் செலுத்தும் கவிதைகளின் வழியே தனது மொழிப்பற்றையும் மொழியின் தாக்கத்தால் மனிதகுலம் அடைந்திருக்கும் உச்சத்தையும் தெளிவுபடுத்திவிடுகிறார்.

கவிஞர் இளையவன் சிவா

இந்திய கப்பல் படையில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பின்னர் தனது அனுபவங்களையும் சமூகத்தில் நிலவி வரும் அவலங்களையும் கண்ணுற்று தனக்குள் எழும் சினத்தையும் ஏதாவது செய்யவேண்டுமென்ற பேராவலையும் கவிதைகளென வடித்து இளைப்பாறி இருக்கிறார்.

எத்தனை பெரிய தாக்கம் இடர் பல இன்னல்கள்
அத்தனையும் தாங்கி தமிழன்னை குன்றாயிளமை
முத்தென மொழிகளில் மூத்தயிவள் காக்க உடலில்
சொத்தாம் உயிர் தரவும் உலகத் தமிழர் காக்க எழுவர்.

விழித்தெழு விழித்தெழு என் உறவே நம்
விழியென்று தமிழ் உன் உயிரில் கொள்
மொழி காக்க நாம் நம் கனவிலும் விழிப்பில் இரு
ஊழிக்காலம் என உருக்குலைக்கவரினும் மொழி காக்க நில்
என தமிழுக்கு மலர்தூவும் கவிதைகளில் மணக்கிறது மொழியின் மீதான பேரன்பு.

ஏழ்மையென்றும் இழிவென்றும் எவனுமற்ற சமூகத்தை எல்லோரும் சமமென்ற சமதர்மத்தின் பாதையிலே தேசம் வீரநடைபோடமென்ற பெருங்கனவின் காட்சிகளென விரிகின்றன கவிதை வரிகள்.

பழந்தமிழர் நிலங்களை ஐவகைப்படுத்தி வாழும் சூழலுக்கேற்ப தம்மைத் தகவமைத்துக்கொண்ட பாங்கினையும் சுட்டிக்காட்டும் வரிகளில் கலையும் காதலும் தம்மை வெளிப்படுத்தி ஆனந்தமடைகின்றன.

சங்க இலக்கியங்களையும் அவற்றின் வழியே சமூகத்தின் அன்றைய நிலையையும் இன்றோடு ஒப்பிட்டு அறிந்துகொள்ள புதைந்திருக்கும் தகவல்கள் ஏராளம்.மக்களாட்சியில் இன்று தேர்தலும் அது தொடர்பான காட்சிகளும் இவரது கவிதைகளில் அதிகமாகவே வெளிப்படுகின்றன.குதிரை பேரம் ஆள்கடத்தல் ஆளில்லாத கட்சிகள் வாக்குக்கு மக்களுக்கு வழங்கும் இலவசங்கள் என இன்றைய கள நிலவரத்தை கவிதைகள் தாராளமாகவும் தரமானதாகவும் காட்சிப்படுத்துகின்றன.

கவிஞர் இளையவன் சிவா

உழைக்கும் மக்களின் பின் நின்று அவர்களின் அனுதினப்பாடுகளையும் கடினமான உழைப்பின் பின்னேயும் மாறாத அவர்களின் வாழ்வியலையும் வலிகளையும் நமக்குள் சுருக்கெனத் தைக்கும்படி எளிய மொழியில் சொல்லும் அழகே தனிச்சிறப்பாகிவிடுகிறது.

மேதினியில் மேதினம், யாருமற்ற சிலுவை, அரசியல் சுகாதாரம் எத்தனை காலம்தான் என கவிதைகளின் வழியே மக்களுக்கு நல்லதொரு நிம்மதியான விடியலைத்தரும் அரசு அமைய வேண்டும் என்ற எல்லோரது விருப்பத்தை வெளிப்படுத்தி விடுகிறார் கவிஞர்.

சமூகத்தில் பெண்களின் நிலை மொழிச்சிதைவின் மீதான கோபம் பாட்டாளியின் துயரம் போதையின் ஆதிக்கம் நேர்மையற்ற தேர்தலின் வழி அரசியல்வாதிகளின் நடவடிக்கைகள் மனிதநேயமற்ற மனிதர்களின் செயல்கள் என நூலெங்கும் பொங்கிடும் கோபத்தின் எரிமலையில் அவலங்கள் பொசுங்கிச் சாம்பலாகுமென்ற நம்பிக்கையே கவிஞரை எழுதத்தூண்டியிருப்பதை உணரமுடிகிறது.

சாதி மத பேதங்கள் தீண்டாமைக் குற்றங்கள் என புரையோடிப்போன சாக்கடைத்தனங்களை சாடும் பல கவிதைகளில் பாரதியாரும் பாரதிதாசனும் பட்டுக்கோட்டை கல்யானசுந்தரமும் எட்டிப் பார்க்கிறார்கள்.இன்றைய அறிவியலின் அசுர வளர்ச்சி எத்தனையோ கருவிகளைக் கண்டுபிடித்தாலும் மனிதர்களின் நேரங்களை மிச்சப்படுத்த உதவினாலும் இன்னும் ஏழ்மையும் வறுமையும் தீர்ந்தபாடில்லையே என்ற ஏக்கம் கவிதைகளில் இழையோடுகிறது.

நூலின் முத்தாய்ப்புக் கவிதையென அந்தோ பரிதாபம் கவிதையைக் கொண்டாடலாம். அறிவின் விரிவு வானமென வாய்ப்புகளை வழங்கி நிற்க இன்னும் மூடநம்பிக்கையிலும் பெண்ணடிமையிலும் மனித சமூகம் பின்னோக்கிப் போவதைச் நாடும் இக்கவிதை இன்றைய எல்லா அவலங்களுக்கும் ஆணிவேராய் மாறி நிற்கும் சமூகத்தின் அறியாமையை வெளிச்சமிடுகிறது.

கரியமேகம் சூழ்ந்து மழை பெய்யாதெனில்
பயிரின் நிலை பரிதாபம்
கல்லில் சிலை வடித்துக் கருவறை

கவிஞர் இளையவன் சிவா

செல்ல இயலா சிற்பி பரிதாபம்
சொல் கொடுத்தும் சபையில்
மொழியாப் புலவன் பரிதாபம் உழைக்காமல் வாழ்வோர் முன்
உழைக்கும் வர்க்கம் பரிதாபம்
கதை கேட்டு கட்டுரை கற்று நினைவில் நிற்காதெனின்
தேர்வில் மாணவன் பரிதாபம்.
தானே எல்லாம் ஆகும் என்றெண்ணும் தறுதலைகள் பரிதாபம்
தேனெனத் தித்திக்கும் மொழி பேசும் சிறுமதியர்
பின்செல்பவர் பரிதாபம்
மந்திரத்தால் இன்று வரை கடவுளைக் காட்டாத
பூசாரி முன்பு பக்தர்கள் பரிதாபம்
காசுக்கு மயங்குவான் என்று கடவுள் சிலைக்கு முன்பு
உண்டியல் வைக்க கடவுளே பரிதாபம் பிறப்புறுப்பு நான்கென்று
பிதற்றோர் முன்பு
பெண்ணின் நிலை அந்தோ பரிதாபம் பரிதாபம்.

மரபுக்கும் புதுமைக்கும் பாலமிட்டு நீரிலும் நெருப்பைப் பூக்க வைக்கமுடியும் என்ற எண்ணங்களின் வலிமையில் ஏவுகணை வரிகளை நம் நெஞ்ச வானில் வீசியிருக்கும் கவிஞரின் நல்லதோர் உலகத்தை நோக்கிய பெரு விருப்பங்கள் நிறைவேறட்டும்.




கவிஞர் இளையவன் சிவா

# புதையல்

## நூல் அனுபவம் (நாவல்)

ஆசிரியர்: மாணவி நா. திவ்யா
பக்கங்கள்: 72
விலை: ரூ 70/-
பதிப்பு: வண்ணத்துப்பூச்சிகள் பதிப்பகம், சென்னை - 28.
அலைபேசி எண்.: 7010 30 9595 / 9382 301 898




கதை சொல்லுதல் என்பது ஒரு கலை. அதனைக் கேட்டு இரசித்தலும் ஒரு கலையே! நம் வாழ்வியலில் கதையென்பது பிரிக்கவியலா ஒன்றாகும். மூத்தோர்கள், இளையோர்களுக்கு இடையே உள்ள உறவெனும் ஊஞ்சலில் கதைக்கண்ணிகளும் உண்டு. ஆனால், தற்போதையக் காலத்தில் அவ்வாறானப் பிணைப்பு குறைந்துள்ளது. இதுபோன்ற நிலையில், சிறார்களுக்கானப் படைப்பாக, நாவல் எழுதுவதற்கு, 12ஆம் வகுப்பு மாணவி நா. திவ்யா முனைந்திருப்பது மனமகிழ்வை அளிக்கிறது. நாமக்கல், குமாரபாளையம், அரசு மாதிரி மகளிர் மேல்நிலைப்பள்ளியிலிருந்து ஒரு 15 வயது கொண்ட படைப்பாளர் உருவாகியுள்ளார். முதற்கண் அந்தப் படைப்பாளருக்கு வாசகர்களின் சார்பாக நல்வாழ்த்துகள்!

"புதையல்" எனும் இந்நூலின், முன் அட்டையில், வண்ணங்களுடனான ஓவியம், சிறார்களைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. அதுவும், ஓவியங்களையும் தானே வரைந்து, "புதையல்" எனும் நாவலுக்குக் கூடுதல் கவனத்தைக் கொடுத்துள்ளார் செல்வி நா. திவ்யா. குறிப்பாக, ஓவியங்களின் வழி வெளியாகும் முகத்தோற்றங்களை, முடிந்த வரையில் ஒவ்வொரு அத்தியாயத்திலும், தொடர்புபடுத்தி உள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். பின் அட்டையில், இந்த இளம் படைப்பாளர், தனக்குக் கதை எழுதத் தூண்டிய அனுபவத்தைப் பகிர்ந்துள்ளார். முதலாவதாக, அவரின் கவனித்துக் கேட்கும் திறன் முதற்புள்ளி ஆகியுள்ளது. அடுத்து, பெற்றோர்கள் பிள்ளையிடத்தே காட்டிய கவனம், எழுத்துகளின் வழியே பயணிக்க, வழிகாட்டி ஆனது. "வண்ணத்துப்பூச்சிகள்" நிறுவனர் திருமிகு லூ. தாமஸ் அவர்களின்

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

கவனம், இதோ, எழுத்தாளராக, அதுவும், சிறார் இலக்கியத்திற்கான ஒரு படைப்பாளராக செல்வி நா. திவ்யாவை அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர், நகைச்சுவைப் பேச்சாளர் திருமிகு திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களின் வாழ்த்துடனும் பாராட்டுடனும் இந்நூல் திகழ்கிறது. முதல் படைப்பிலேயே இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது என்பது கூடுதல் சிறப்பாகும்.

முதல் அத்தியாயத்தில், நட்பு பாராட்டும் நான்கு மாணவச் சிறுவர்களை அறிமுகம் செய்கிறார் நாவலாசிரியர் நா. திவ்யா. இவர்களுடன் ராமு என்ற நாயும் உண்டு. அது கபிலனின் சகோதரனாக வருகிறது. அஃறிணையிடத்தும் அன்பு செலுத்துதல் மனிதத்தில் மகத்தானது அன்றோ? பிள்ளைகளுடன் இந்த ராமுவிற்கும் முக்கியப் பங்கு, கதையில் உள்ளது. இன்னும் சொல்வதானால், கதையின் சுவாரசியம் ராமுவிடமிருந்தே தொடங்குகிறது.

இக்கதையில், முதல் "புதையல்" எனச் சொல்வதுபோல, ஒரு புத்தகம் கிடைக்கிறது. அந்தப் புத்தகத்தில் உள்ளவற்றை அறிந்துகொள்ள சபரியின் பாட்டி உதவுகிறார். மூத்தோரின் வாய்ச்சொல் முத்திற்கு ஒப்பன்றோ? "புதையல்" கதையில் சிறார்களுக்கான நற்பண்புகள் பற்றியக் குறிப்பு ஆங்காங்கே விரவியுள்ளன.

அத்தியாயம் இரண்டில், புத்தகம் காணாமல் போனது பற்றிச் சொல்வதானால் சபரியின் வருத்தம், முகிலன் மற்றும் நண்பர்களின் கோபம் என்று பரபரப்பானச் சூழல் நிலவுகிறது. தேடுதலுக்குப் பின், எதிர்பாரா விதமாக, சபரியின் தந்தையிடமிருந்து அப்புத்தகம் கிடைத்து விடுகிறது.

மூன்றாவது அத்தியாயத்தில், ஆவலுடன், ஐவரும் பயணத்தைத் தொடங்குகிறார்கள். வழிகாட்டியாக, புத்தகத்தில் உள்ள வரைபடம் இருக்கிறது. இங்குதான் வழியில் அவர்களுக்கு, பலாப்பழத்தில் தங்க நிறத்தில் சாவி கிடைக்கிறது. இவர்களின் அனுபவம் இவ்விதமாக இருக்கையில், வீட்டில் பிள்ளைகளைக் காணாது, பெற்றோர்கள் அவர்களைத் தேடத் தொடங்குகிறார்கள்.

## நூல் அனுபவம் (நாவல்)

ஆனால், நண்பர்கள் ஒரு அரண்மனைக்குள் சிக்கி விடுகிறார்கள். இங்கு, திருடர்களும் இருக்கிறார்கள். அங்கிருந்து சமாளித்து வெளிவருவதை, இந்த அத்தியாயத்தில், நகைச்சுவையாகக் கூறியுள்ளார் நாவல் ஆசிரியர் நா. திவ்யா. இதில் சிறுவர்கள் "கராத்தே" கற்றதின் பயனை உபயோகப்படுத்துவாகவும் கதையின் நிகழ்வு வருகிறது.

நான்காம் அத்தியாயத்தில் ஒரு குகைக்குள் ஐவரும் நுழைகிறார்கள். அங்கும் ஒரு எதிர்பாராத திருப்பம் நிகழ்கிறது. பலாப்பழத்தில் கிடைத்த சாவி இங்கு பயன்படுவதாக கதை அழகாக நகர்கிறது.

ஐந்தாவது அத்தியாயத்தில், சிறுவர்களின் பயணம் குகை மற்றும் அங்கிருக்கும் புலி என்று பரபரப்பாகச் செல்கிறது கதை. பெரியோர்களும் சிறார்களைத் தேடும் பணியில் மும்முரமாகின்றனர்.

இந்த அத்தியாயத்தில், வருகின்ற இயற்கைப் பிண்ணனி, நேரில் காண்பதுபோல் எழுத்துக்களால் வர்ணிக்கப்படுகிறது. செல்வி நா. திவ்யாவின், இயற்கையைக் குறித்த இப்பகுதியில், கதையினூடே நாமும் பயணிப்பது போன்ற அனுபவம் கிட்டும்.

இதுவரை, கடந்து வந்த பாதையும் மாறி இப்போது ஆறாம் அத்தியாயம் கடற்கரையில் சிறுவர்களை ஆசுவாசப்படுத்துகிறது. ஒரு அழகானச் சிறுமி இங்கு நண்பர்களின் கைவினைத் திறமைகளை வெளிப்படுத்தும்படியான கதையின் தொடர்ச்சி செல்கிறது. பெரும்பாலும், நம் கதைகளில், ஒரு தேவதை, ஒரு நாயகன், ஒரு முதியோர் இப்படி என்று எந்தவிதத்திலாவது ஒரு உதவி செய்யும் கதாபாத்திரம் வரும். அதுபோல், இங்கு அச்சிறுமி தமிழினி எனும் பெயரில் வந்துவிடுவாள்.

ஏழாம் அத்தியாயத்தில், நண்பர்கள் படகில் ஏறுகிறார்கள். பயணத்தில், ஒரு தீவினைப் பார்க்கிறார்கள். இன்னோர்புறம், சிறுவர்களின் வேகத்தைப்போல் அவர்களின் பெற்றோர்களும் காவலர்களும் தேடுதலில் தொடர்ந்து செயல்படுகின்றார்கள்.

எட்டாவது அத்தியாயம், உண்மையானச் செல்வம் கல்வி என்பதை நிலைநிறுத்தி நிறைவாகிறது. சிறார்களின் கடல் கடந்து வந்த இந்தப் பயணத்தை, அனுபவத்தை, வாசகர்கள் படிக்கவேண்டும்.


கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

அப்போது இன்னும் நிறைய விறுவிறுப்புடன் நண்பர்கள் ஐவரும் பெரும் "புதையல்" கண்டதை கதைவழியே காணலாம். உணரலாம்.

இவ்வாறாக, நாம் இந்தப் படைப்பில் கவனம் செலுத்தினால், இந்த இளம் படைப்பாளர், இன்னும், நிறைய படிப்பார்; எழுதுவார்! அத்துடன் மற்றோரையும் அவ்வண்ணமே செய்யத் தூண்டுவார் என்பதில் ஐயமேது? மீண்டும் இளம் படைப்பாளர், செல்வி நா. திவ்யா அவர்களுக்கு நல்வாழ்த்துகள்!

நிறைவாக, "வண்ணத்துப் பூச்சிகள்" நிறுவனர் திருமிகு லூ. தாமஸ் அவர்களுக்கு, நன்றிநிறை வணக்கங்கள்! அவர் வழியே, இந்நூலின் வாசிப்பனுவத்தைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பளித்தமைக்கு மிக்க நன்றி!



என்னைப் பற்றி...
வளர் இளம் எழுத்தாளர்
நா. திவ்யா, வயது 15, 12ம் வகுப்பு

வாசகர்களுக்கு வணக்கம்.!

கதைகள் என்றால் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும். எனக்கும் கூட! சிறு பிராயத்தில் இருந்தே என் அம்மா எனக்கு நிறைய கதைகள் சொல்வார். அதையெல்லாம் ஆர்வத்தோடு கேட்பேன். அதைக் கேட்கும் போதெல்லாம் நானும் சுவாரஸ்யத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தும் வகையில் கதைகள் எழுதவேண்டும் என்று எண்ணுவேன். அவ்வெண்ணம் தோன்றும் போதெல்லாம், அதெல்லாம் என்னால் முடியுமா? என்ற தாழ்வு மனப்பான்மையும் தோன்றிவிடும். ஆனாலும், அதையெல்லாம் தள்ளிவிட்டு சில சிறுகதைகள் எழுதினேன். அதையெல்லாம் நான் சேகரித்து கூட வைக்கவில்லை. என் அம்மாவும், அப்பாவும் என் ஒவ்வொரு சிறு படைப்பையும் பார்த்து பாராட்டி ஊக்குவித்து, என் எழுத்துத் திறமையை எனக்கு அறிமுகப்படுத்தினர்.

இன்று இந்த சிறார் நாவலை முழுவதுமாக எழுதி முடிப்பதற்குத் தூண்டுகோலாக இருந்தது வண்ணத்துப்பூச்சிகள் மின்னிதழ். என் எழுத்துக்களைப் பிறர் அறிய களம் அமைத்துக் கொடுத்த வண்ணத்துப்பூச்சிகள் நிறுவனர் லூ.தாமஸ் அவர்களுக்கு நன்றி.!

எழுத்துலகில் பிரவேசிக்க நான் வைத்த முதல் அடி இந்த நூலாகும். எழுத்துத் துறையில் பல ஆதவன்கள் இருந்தாலும் அதில் நான் சிறு நட்சத்திரமாகவேனும் பிரகாசிக்க விரும்புகிறேன். அதற்கு வாசகர்கள் தங்கள் வாழ்த்துக்களையும், ஆதரவையும் நல்குவர் என்று நம்புகிறேன்.

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# சொல்லின்செல்வர் -ரா.பி.சேதுப்பிள்ளை

## கட்டுரை

**பிறப்பு:**



திருநெல்வேலிக்கு அடுத்து இராசவல்லிபுரம் என்ற ஊரில் 02.03.1896 பிறவிப்பெருமான்பிள்ளை - சொர்ணம்மாள் தம்பதியினருக்குப் பதினோராவது பிள்ளையாகப் பிறந்தார். சேதுக்கடலாடி இராமேசுவரத்திலுள்ள இறைவனைப் பூசித்ததால், பிறந்த தம்மகனுக்கு சேது என்று பெயர் சூட்டினர். இரா.பி. சேதுப்பிள்ளையின் முன்னெழுத்துகளாக அமைந்த 'இரா' என்பது இராசவல்லிபுரத்தையும் 'பி' என்பது 'பிறவிப்பெருமான்பிள்ளை' அவர்களையும் குறிப்பன.

**கல்வி:**

தனது ஐந்தாம் அகவையில் உள்ளூர்த் திண்ணைப் பள்ளியில், தமிழ்நீதிநூல்களைக் கற்றார். இராசவல்லிபுரம் செப்பறைத் திருமடத்தலைவர் அருணாசலதேசிகரிடம் மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம், தேவாரம், திருவாசகம் போன்ற நூல்களைக் கற்றார். தனது தொடக்கக் கல்வியைப் பாளையங்கோட்டை தூய சேவியர் உயர்நிலைப் பள்ளியிலும், இடைநிலை வகுப்பின் (இண்டர்மீடியட்) இரண்டாண்டுகளை திருநெல்வேலி இந்துக்கல்லூரியிலும், இளங்கலைவகுப்பின் இரண்டாண்டுகளைச் சென்னை பச்சையப்பன்கல்லூரியிலும் தேர்ச்சி பெற்றார்.

தாம் படித்த பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே சட்டக்கல்லூரியில் மாணவராகச் சேர்ந்து படித்தார். சட்டப்படிப்பை முடித்து நெல்லையப்பபிள்ளையின் மகள் ஆழ்வார் ஜானகியை மணந்தார்.

**பணிகள்:**

1923 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பதிவுசெய்துகொண்டு பணியாற்றத் தொடங்கினார். நெல்லையில்

# சொல்லின்செல்வர் -ரா.பி.சேதுப்பிள்ளை

## கட்டுரை

**பணிகள்:**

1923 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் வழக்கறிஞராகப் பதிவுசெய்துகொண்டு பணியாற்றத் தொடங்கினார். நெல்லையில் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்ட சேதுப்பிள்ளை, நகர்மன்ற உறுப்பினராகவும், நகர்மன்றத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். வழக்குரைஞராக இருப்பினும் தமிழ்மொழியின்மீது மிகுந்த பற்றுக்கொண்டிருந்தார். இவரின் செந்தமிழ்த்திறம் அறிந்த அண்ணாமலைப்பல்கலைக்கழகம் இவரைத் தமிழ் அறிஞராக ஏற்றுக்கொண்டு தமிழ்த்துறையில் தமிழ்ப் பேரறிஞர் பதவியை அளித்தது.

1936-இல் சென்னைப் பல்கலைக்கழகம் சேதுப்பிள்ளையைத் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தியது. 25 ஆண்டுக்காலம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றிய சேதுப்பிள்ளை தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழுக்குப் பெருமையும் தமிழ் உரைநடைக்குச் சிறப்பையும் சேர்த்தார். அந்நாளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சித்துறைத் தலைவராகப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பணியாற்றிவந்தார். வையாபுரிப்பிள்ளையின் ஓய்வுக்குப்பின் இவர் தலைமைப்பதவியை ஏற்றார்.

**படைப்புகள்:**




இரா.பி. சேதுப்பிள்ளையின் உரைநடை நூல்கள் 20-க்கும் மேற்பட்டு அடங்குவன. 14- கட்டுரை நூல்கள், 3- வாழ்க்கை வரலாற்று நூல்கள், 4-நூல்களை பதிப்பித்தார். சேதுப்பிள்ளையின் நூல்களுள் பலவும் அவர் தமிழகவானொலி நிலையங்களில் ஆற்றிய இலக்கியப்பொழிவுகளின் தொகுப்புக்களாகும்.

இவர் எழுதிய முதல் கட்டுரை நூல் "திருவள்ளுவர் நூல்நயம்" என்பதாகும். படைத்த உரைநடைநூல்களுள் தலைசிறந்ததாகவும் வாழ்க்கைப் பெருநூலாகவும் விளங்குவது, "தமிழகம் ஊரும் பேரும்" என்பதாகும்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

### சொல்லின்செல்வர் - சேதுப்பிள்ளை:

அடுக்குமொழி, எதுகை, மோனை, இலக்கியத் தொடர்மூன்றையும் உரைநடைக்குள் கொண்டு வந்த சேதுப்பிள்ளையின் பேச்சாற்றலைப் பாராட்டித் தருமபுரஆதீனம் 1950ம்ஆண்டு 'சொல்லின்செல்வர்' என்னும் விருது வழங்கியது. சேதுப்பிள்ளையின் ஆங்கிலநடை அறிஞர் ஹட்சனின் நடையைப் போன்றது என்று சோமலே பாராட்டுவார். இவர் தமிழுக்கு ஆற்றிய பணிகளுக்காகச் சென்னைப்பல்கலைக்கழகம் 'முனைவர்' பட்டம் வழங்கிச்சிறப்பித்தது. மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கால்நூற்றாண்டுகாலம் பணியாற்றியதைப் பாராட்டி "வெள்ளிவிழா" எடுத்தும், "இலக்கியப்பேரறிஞர்" என்ற பட்டம் அளித்தும் சிறப்பித்தது.

### நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்



- ஆற்றங்கரையினிலே (நூல்)
- கடற்கரையினிலே (நூல்)
- கிருஸ்தவத் தமிழ்த்தொண்டர் (நூல்)
- தமிழ் விருந்து (நூல்)
- தமிழக ஊரும் பேரும் (நூல்)
- தமிழர் வீரம் (நூல்)
- தமிழின்பம் (சாகித்ய அக்காதமி பரிசு பெற்றநூல்)
- மேடைப்பேச்சு (நூல்)
- வேலின் வெற்றி (நூல்)

### மறைவு:

தமிழ் அறிஞர், எழுத்தாளர், வழக்கறிஞர், மேடைப்பேச்சாளர் என பன்முகம் கொண்ட பாவலர். தமிழில் சொற்பொழிவு ஆற்றுவதிலும், உரைநடை எழுதுவதிலும் பெயர் பெற்றவர். இனிய உரைச்செய்யுள் எனக் குறிப்பிடும் அளவுக்கு அவரது உரைநடை இனிமை வாய்ந்தது எனப்பலரும் பாராட்டியுள்ளனர்.

தமிழ்வளர்ச்சிக்காகத் தமது இறுதிக்காலம்வரை பாடுபட்ட சொல்லின்செல்வர்ரா.பி. சேதுப்பிள்ளை 25.04.1961ல் 65 -ஆம் வயதில் மறைந்தார்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

# நாளை நமதே

## கடந்த காலம் நமக்கு
## பாடமாக இருக்கவேண்டுமேயொழிய
## பாரமாக இருக்க
## நாம் அனுமதிக்கக்கூடாது

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே                                    முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை



தொடர்பிற்கு :

9597887847
8870884969

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa    www.aagaramuthala.com    aagaramuthala@gmail.com